**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No. 189/2022</u>**

**<u>நாள் : 02.02.2026</u>**
**ம.சா.** 1 சத்தியா,

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் விபத்து சமயத்தில் ஹாஸ்டன் ஷீ கம்பெனியில் வேலை செய்தேன் என்றால் சரிதான். நான் தினமும் ஷீ கம்பெனிக்கு கம்பெனி வேனில்தான் போவேன். விபத்து நடந்த சமயத்தில் கம்பெனி வேனில் சுமார் 10 லிருந்து 15 பேர் இருந்திருப்பார்கள். கம்பெனி வேனில் 32 பேர் பயணித்த நிலையில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ளது என்றால் சரியல்ல. 12 பேர் பயணிக்கவேண்டிய கம்பெனி வேனில் 32 பேர் பயணித்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறும் நோக்கில் 12–15 பேர் பயணித்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காயம்பட்டவுடன் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான்.

ஆம்பூரில் சிகிச்சை எடுத்ததற்கு பின்னிட்டு வேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அட்மிட் ஆனேன். ம.சா.ஆ.10 ஆவணத்தில் முதுகு தண்டுவடத்தில் எந்த பாதிப்பும் இல்ல என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது வரை கோவிந்தராஜ் மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டுதான் வருகிறேன். அத்துடன் ஸ்கேன் அறிக்கையில் anterior wedge of D 11 body causing mild indentation of torcel cord என்று கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கு பின்னிட்டு முழுவதும் குணமடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

கோவிந்தராஜ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு முறையான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

அதிகப்படியான நஷ்ட ஈடு பெறும் நோக்கில் ஆவணங்களை மிகைப்படுத்தி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான்  பல்வேறு தலைப்புகளின்கீழ் எனக்கு ஏற்பட்ட செலவினங்களை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 12 பேர் செல்லத்தக்க வண்டியில் 32 பேர் பயணித்து விபத்து ஏற்பட்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பாலிசி நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதால் என்னை பணிக்கு அமர்த்திய 1ஆம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

**ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,**
**சிறப்பு சார்பு நீதிபதி (MACT),**
**திருப்பத்தூர்.**